**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர்.**

**முன்னிலை : செல்வி.ஆர்.ஸ்ரீநிதி.B.A., L.L.B.(Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1**
**கடலூர்.**

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ஆம் நாள் திங்கள்கிழமை
திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனி 26ம் நாள்
CNR. No. TNCD06-020156-2025
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 2060/2025

காவல் உதவி ஆய்வாளர்
நெல்லிக்குப்பம் காவல் நிலையம்
குற்ற எண்.1182/2020

....குற்றமுறையிடுபவர்

-- எதிர் --

1. நாகூரான் (வயது-60)
த/பெ. குப்புசாமி

2. ரவீந்திரன் (வயது-28)
த/பெ. முத்தையாபிள்ளை ....எதிரிகள்

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C.No. 814/2020/RG/F1 (P.Dis.No. 36/2021) உத்தரவு மற்றும் Rule 106 Cr.R.P.-ன்படி**

## CASE SUMMARY

| i) The Period of Remand of the Accused: | Date of Remand | Date of surrender | Released on Bail |
|---|---|---|---|
| | A1, A2-18.07.2020 | -- | A1-18.01.2021<br>A2-15.10.2020 |

<table>
<tr><td rowspan="2">ii) Date of filing of the Complaint / Final report in the Court</td><td>Filing of complaint</td><td colspan="2">Filing of Final Report</td></tr>
<tr><td>--</td><td colspan="2">24.07.2020</td></tr>
<tr><td>iii) The date of questioning of the Accused U/s.240 of the Code of Criminal Procedure, 1973</td><td colspan="3">03.02.2026</td></tr>
<tr><td rowspan="2">v) Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the Code</td><td>Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td>--</td><td>--</td><td>--</td></tr>
<tr><td rowspan="3">v) Date of examination in-chief and cross-examination of a witness</td><td>Name of the Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>1.திரு.கலியன் (தலைமை காவலர்)</td><td>23.03.2026</td><td>23.03.2026</td></tr>
<tr><td>2.திரு.சம்பத்குமார் (தலைமை காவலர்)</td><td>23.03.2026</td><td>23.03.2026</td></tr>
<tr><td></td><td>3.திரு. பாலாஜி (காவல் ஆய்வாளர் ஓய்வு)</td><td>02.04.2026</td><td>02.04.2026</td></tr>
<tr><td>vi) Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C.</td><td colspan="3">06.04.2026</td></tr>
<tr><td>vii) Details of abscondence of an Accused and his appearance / production, as the case may be: and</td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>viii) Grant of stay by superior</td><td colspan="3">Nil</td></tr>
</table>

| Courts and the results there of: | |
|---|---|

இவ்வழக்கானது 22.10.2025-ந் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.04.2026-ந் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி.நிவேதா அவர்களும், 1 வது எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.மணிவண்ணன் அவர்களும் ஆஜராகியும், 2 வது எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கடந்த 18.07.2020 ந் தேதி காலை 06.00 மணிக்கு 1வது எதிரி PY-01-AQ-1523 என்ற பதிவெண்கொண்ட Splendor Plus மோட்டார் சைக்களின் முன்னால் சாக்குபையில் சுமார் 50 கிலோ அளவுள்ள அரசுக்கு சொந்தமான தென்பெண்ணை ஆற்றுமணலை வைத்துக்கொண்டு, 2வது எதிரியை வாகனத்தில் பின்னால் உட்கார வைத்து கொண்டும் எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ மற்றும் பற்றுச்சீட்டோ இல்லாமல் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்துடன் சட்டத்திற்கு புறம்பாக ஏற்றிக்கொண்டு வந்த ஆற்று மணலை 0.02 யூனிட் ஆற்று மணலை உதவி பொறியாளர் பொதுப்பணித்துறை பாசனப்பிரிவு நீ.ஆ.து கடலூர் அவர்கள் அலுவலகம் அனுப்பி வைக்கப்பட்டும் மணலின் மதிப்பு ரூ.40/- என சான்று வழங்கியதன் பேரில் ரூ.40/- மதிப்புள்ள இயற்கை வளமான ஆற்று மணலை திருடி பொதுமக்களுக்கும், நீர்வரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார்கள் என்று நெல்லிக்குப்பம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சட்டப்பிரிவு 430, 379 -ன் கீழ், குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிகளுக்கு 207இதசவின் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4) குற்றச்சாட்டு :-**

எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரிகளிடம் அவர்கள் மீதான குற்றங்கள் குறித்து வினவியபோது எதிரிகள் தங்கள் குற்றங்களை மறுத்தார்கள். எதிரிகள் தங்கள் குற்றங்களை மறுக்கவே வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்கு போதுமான ஆதாரம் இருப்பதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 430, 379 இதசவின் கீழ், குற்றச்சாட்டு வனைந்து, தமிழில் படித்துக்காட்டி விளக்கி கூறி வினவியபோது எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று கூறினார்கள்.

5) அரசுத்தரப்பில் 1 முதல் 4 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

**தலைமைக் காவலர் திரு.கலியன் (அ.சா.1) தன்னுடைய சாட்சியத்தில்,** கடந்த 18.07.2020 நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி புரிந்தபோது காலை 6.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.பாலாஜி மற்றும் முதல்நிலை காவலர் திரு.சம்பத்குமார் ஆகியோர்கள் காலை ரோந்து பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி விஸ்வநாதபுரத்தில் உள்ள தென்பெண்ணை ஆற்றங்கரையில் எவ்வித அரசு அனுமதியின்றி இரு சக்கர வாகனத்தில் சுமார் 50 கிலோ தென்பெண்ணை ஆற்று மணல் மூட்டையை எடுத்து செல்வதாக உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது 1வது எதிரி நாகூரான் என்பவர் வண்டியை ஓட்டி சென்றும் 2வது எதிரி ரவீந்திரன் பின்னால் அமர்ந்து கொண்டும் 50 கிலோ மணல் மூட்டையை ஏற்றிக்கொண்டு வரும்போது ஆய்வாளர் அவர்களை தடுத்து நிறுத்தி விசாரித்தபோது அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் ஆற்று மணலை திருட்டு தனமாக கடத்தி வந்தது தெரியவந்தது. பின்னர் பாட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து காரணம் கூறி கைது செய்தும் அந்நிய

சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் என்னுடன் பணியில் இருந்த திரு. சம்பத்குமார் எங்கள் முன்னிலையில் எதிரி ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தையும் மற்றும் 50 கிலோ தென்பெண்ணை ஆற்று மணல் மூட்டையையும் காலை 6.15 மணிக்கு கைப்பற்றி ஒரு கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 தயார் செய்து, பின்னர் காலை 7.30 மணியளவில் நிலையம் ஆஜராகி எதிரிகள் மீது நெல்லிக்குப்பம் காவல்நிலைய குற்ற எண். 1182/2020 சட்டப் பிரிவுகள் 430, 379 இதச உடன் இணைந்த 21(1)ன் Mines and Minerals Act ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7) **தலைமைக் காவலர் திரு.சம்பத்குமார் (அ.சா.2) தன்னுடைய சாட்சியத்தில்,** கடந்த 18.07.2020 நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி புரிந்தபோது காலை 6.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.பாலாஜி மற்றும் முதல்நிலை காவலர் திரு. கலியன் ஆகியோர்கள் காலை ரோந்து பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி விஸ்வநாதபுரத்தில் உள்ள தென்பெண்ணை ஆற்றங்கரையில் எவ்வித அரசு அனுமதியின்றி இரு சக்கர வாகனத்தில் சுமார் 50 கிலோ தென்பெண்ணை ஆற்று மணல் மூட்டையை எடுத்து செல்வதாக உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது 1வது எதிரி நாகூரான் என்பவர் வண்டியை ஓட்டி சென்றும் 2வது எதிரி ரவீந்திரன் பின்னால் அமர்ந்து கொண்டும் 50 கிலோ மணல் மூட்டையை ஏற்றிக்கொண்டு வரும்போது ஆய்வாளர் அவர்களை தடுத்து நிறுத்தி விசாரித்தபோது அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் ஆற்று மணலை திருட்டு தனமாக கடத்தி வந்தது தெரியவந்தது. பின்னர் பாட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து காரணம் கூறி கைது செய்தும் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் என்னுடன் பணியில் இருந்த திரு. கலியன் எங்கள் முன்னிலையில் எதிரி ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தையும் மற்றும் 50 கிலோ தென்பெண்ணை ஆற்று மணல் மூட்டையையும் காலை 6.15 மணிக்கு கைப்பற்றி ஒரு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து, பின்னர் காலை 7.30 மணியளவில் நிலையம் ஆஜராகி எதிரிகள் மீது நெல்லிக்குப்பம் காவல்நிலைய குற்ற எண். 1182/2020 சட்டப் பிரிவுகள் 430, 379 இதச உடன் இணைந்த 21(1)ன் Mines and

Minerals Act ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**8) காவல் ஆய்வாள் ஓய்வு திரு.பாலாஜி (அ.சா.3) தன்னுடைய சாட்சியத்தில்,** கடந்த 18.07.2020ம் தேதி நானும் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் பணி புரிந்த தலைமை காவலர் திரு.கலியன் மற்றும் திரு.சம்பத் ஆகியோர்கள் பார்ட்டி சகிதம் சுற்று காவல் பணியாக காலை 6.00 மணியளவில் விஸ்வநாதபுரம் பெண்ணை ஆற்றின் கரை அருகே வரும்போது அங்கு இருசக்கர வாகனத்தில் முன் பகுதியில் ஒரு மூட்டையுடன் இருவர் வந்தவர்கள் எங்களை கண்டதும் வாகனத்தை போட்டு விட்டு ஓட முயற்சி செய்தவர்களை நாங்கள் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அந்த மூட்டையில் ஆற்று மணலும் இருசக்கர வாகனம் PY-01-AQ-1523 என்ற பதிவெண்டகொண்ட ஸ்பெண்டர் பிளஸ் வாகனம் இருந்து. அவர்கள் இருவரையும் விசாரித்தபோது வாகனத்தை ஓட்டி வந்த நபர் வைடிப்பாக்கம் நாகூரான் என்பதும் பின்னால் அமர்ந்து வந்த நபர் விஸ்வநாதபுரத்தை சேர்ந்த ரவீந்தரன் என்பதும் தெரியவந்தது. அவர்கள் இருவரும் எடுத்து வந்த தென்பெண்னை ஆற்று மணல் மூட்டைக்கு எந்தவித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் திருட்டு தனமாக கொண்டு வந்தது தெரியவந்தது. இதனால் நீர் நிலை குறையும் ஆற்று மணல் வளம் குறையும் என்று தெரிந்தும் மணல்களை திருடி வந்ததை கூறி காலை 6.10 மணிக்கு கைது செய்தும் 6.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் மேற்கூறிய காவலர்கள் முன்னிலையில் தயார் செய்தும், தடயத்தை கைப்பற்றியும் பின்னர் 7.30 மணியளவில் காவல் நிலையம் வந்து எதிரிகள் இருவர் மீதும் நிலைய குற்ற எண் 1182/2020 சட்டப் பிரிவுகள் 430, 379 இதசவின் உடன் இணைந்த 21(1)M&M Act படி வழக்கு பதிவு செய்து, பின்னர் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 பதிவு செய்து, பின்னர் சாட்சிகள் திரு. கலியன் மற்றும் திரு சம்பத் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலம் தடயத்தை படிவம் -95 அ.சா.ஆ.3 மூலம் சா.பொ.1 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, பின்னர் எதிரிகளை உரிய நடைமுறைக்கு பின் உரிய வழிக்காவல் துணை மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 24.07.2020 ம் தேதி கைப்பற்றப்பட்ட தென்பென்னை ஆற்று மணலை கடலூர் நீர் வள உதவி பொறியாளர் அவர்களுக்கு சான்று பெற அனுப்பிவைத்தேன். அவர் ஆய்வு செய்து

கைப்பற்றப்பட்ட மணலானது 0.02 யூனிட் என்றும் அதன் மதிப்பு ரூ. 40/- என்றும் சான்று அ.சா.ஆ.4 வழங்கினார். மேற்படி ஆய்வு செய்த உதவி பொறியாளர் திரு. தாமோதரன் என்பவரை விசாரணைசெய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் சட்டப் பிரிவை 379, 430 இதசவின் படி பிரிவு மாற்றம் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 தயார் செய்து, இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் இருவர் மீதும் சட்டப் பிரிவு 379, 430 ன் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

9) இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

10) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து சட்டப்பிரிவு 313(1)(ஆ) இதசவின் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**11) விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் காவல்துறை சாட்சிகள் என்றும், இவ்வழக்கில் காவல் துறை சாட்சிகளை தவிர தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை. எனவே எதிரிகள் மீதான குற்றம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படவில்லை. சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

**13)** இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**14)** இவ்வழக்கில் கடந்த 18.07.2020 ந் தேதி 1வது எதிரி PY-01-AQ-1523 என்ற பதிவெண்கொண்ட Splendor plus இருசக்கர வாகனத்தில் முன்னால் சாக்குபையில் சுமார் 50 கிலோ அளவுள்ள அரசுக்கு சொந்தமான ஆற்றுமணலை வைத்துக்கொண்டும், 2வது எதிரியை இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார வைத்து கொண்டு எந்தவிதமான அரசு அனுமதியோ, உரிமமோ மற்றும் பற்றுச்சீட்டோ இல்லாம் ஆற்று மணலை திருடி சென்றதாக எதிரிகள் மீது 430, 379 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பது அரசுத்தரப்பின் வழக்காகும்.

**15)** புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் ஓய்வு திரு.பாலாஜி (அ.சா.3) உடன் ரோந்து பணிக்கு உதவியாக சென்ற தலைமைக் காவலர் திரு.கலியன் (அ.சா.1) 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் **"அன்று எனக்கு எப்போது பணி நேரம் என்றால் 17.07.2020 ல் நான் தான் GD பொறுப்பில் இருந்தேன். பொதுவாக GD பொறுப்பில் இருப்பவர்களுக்கு தான் எந்த தகவலும் முதலில் வரும் என்றால் சரிதான். எனக்கு அவ்வாறு எந்த ரகசிய தகவலும் வரவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளருக்கு எத்தனை மணிக்கு ரகசிய தகவல் கிடைத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கஸ்டம்ஸ்ரோடு என்பது மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் பகுதி என்றால் சரிதான். எதிரி எந்த சாக்கில் மணல் கடத்தினார் என்றால் பிளாஸ்டிக் சாக்கில் கடத்தினார். எந்த நிறத்தில் இருந்தது என்றால் வெள்ளை மற்றும் மஞ்சள் நிறத்தில் இருந்தது. கைப்பற்றுதல் மகசரில் கடத்தி சென்ற சாக்கு எந்த நிறத்தில் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.**

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் **"இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டதா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் பொதுமக்கள் யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. முதல் விசாரணையில் அந்நிய சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். யார் முன்வரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.**" என்று கூறியுள்ளார்.

**16)** புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் ஓய்வு திரு.பாலாஜி (அ.சா.3) உடன் ரோந்து பணிக்கு உதவியாக சென்ற தலைமைக் காவலர் திரு.சம்பத்குமார் (அ.சா.2) 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் **"சம்பவ இடமாக சொல்லப்படும் இடத்தில் டீ கடை உள்ளது என்றால் சரிதான். கடையில் எப்போதும் 40 முதல் 50 நபர்கள் இருப்பார்கள் என்றால் சரியல்ல. 10 பேர் அளவில் இருப்பார்கள். நாங்கள் சென்றவுடன் 10 பேர் கூடிவிட்டார்கள் என்றால் இல்லை. கைப்பற்றியதாக சொல்லப்படும் மணல் சாக்கு எந்த சாக்கு என்றால் பிளாஸ்டிக் சாக்கு அது மஞ்சள் நிறத்தில் இருந்தது. கைப்பற்றுதல் மகசரில் சாக்கு எந்த நிறத்தில் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மணல் சாக்கை எங்கு வைத்திருந்தார்கள் என்றால் அவர்கள் வந்த வண்டியின் பின்னால் உட்கார்ந்திருந்தவர் மணல் மூட்டையை நடுவில் வைத்து பிடித்திருந்தார்"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3, தனது குறுக்கு விசாரணையில் **"நான் ஆற்றுக்கு சென்று அங்கு எங்கு எப்படி பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று பார்வையிட்டு பார்வை மகசரோ, வரைபடமோ தயார் செய்தேனா என்றால் இல்லை**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**17)** மேற்கண்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது,

**18)** இவ்வழக்கில் அ.சா.1 சாட்சிகள், கஸ்டம்ரோடு என்பது மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் பகுதி என்றால் சரிதான் என்றும், அ.சா.2 தனது சாட்சியத்தில், சம்பவ இடமாக சொல்லப்படும் இடத்தில் டீ கடை உள்ளது என்றால் சரிதான் என்றும் கூறியுள்ளார்கள். ஆனால் இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து சாட்சிகளாக சேர்க்கவில்லை. தனிநபர் சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் விசாரித்து சாட்சிகளாக சேர்காதது இவ்வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

19) மேலும், அ.சா.1, 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் **"பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டதா என்றால் இல்லை**" என்று கூறியுள்ளார். ஆனால் அ.சா.2 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் **" பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கப்பட்டதா என்றால் ஆமாம்"** என்று கூறியுள்ளார். இதிலிருந்து உண்மையில் அ.சா.3 உடன் அ.சா.1 மற்றும் அ.சா.2 ரோந்து பணிக்கு சென்றிருந்தால், புலன் விசாரணை அதிகாரி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்களா என்பது குறித்து கூறியிருப்பார்கள். ஆனால் அ.சா.1 மற்றும் அ.சா.2 பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்து ஒன்றுக்கொன்று முரண்பாடாக சாட்சியம் அளித்துள்ளது மேலும் இவ்வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மேலும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.3, பார்வை மகசர் மற்றும் வரைபடமோ தயார் செய்தேனா என்றால் இல்லை என்று கூறியுள்ளார்.

20) மேலும், அரசுத்தரப்பில் எதிரிகள் மணல் மூட்டையை இருசக்கர வாகனத்தின் பெட்ரோல்டேங்கில் வைத்து எடுத்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.2, 1 வது எதிரி தரப்பு தனது குறுக்கு விசாரணையில் **"வண்டியின் பின்னால் உட்கார்ந்திருந்தவர் மணல் மூட்டையை நடுவில் வைத்து பிடித்திருந்தார்**" என்று கூறியுள்ளதிலிருந்து, எதிரி மணல் மூட்டையை பெட்ரோல் டேங்கில் வைத்து எடுத்து வந்தாரா இல்லை அ.சா.2 செல்வதுபோல் மணல் மூட்டையை இருசக்கர வாகனத்தில் நடுவில் வைத்து 2வது எதிரி பிடித்துவந்தார் என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. மேலும் அ.சா.2 சொல்வதுபோல் இவ்வழக்கில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யபட்டிருந்தால் ஏன் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டவில்லை என்பது குறித்தும் சந்தேகம் எழுகிறது.

21) மேலும், குற்ற வழக்கை பொறுத்தவரை பொதுவாக சம்பவம் நடந்தயிடம் மாதிரி வரைபடமாக வரையப்பட்டு, அங்கிருக்கும் சாட்சிகளை விசாரித்து பார்வை மகசர் தயார் செய்ய வேண்டும். ஆனால் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி அவ்வாறு மாதிரி வரைபடமோ பார்வை மகசரோ தயார் செய்யாதது மேலும் இவ்வழக்கில்

சந்தேகத்தை ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது. அதுமட்டுமின்றி அரசுத்தரப்பில் பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் காவல் துறையை சேர்ந்த சாட்சிகள். காவல் துறை சாட்சிகளை தவிர பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் காவல் துறையினரின் சாட்சியத்தை ஊர்ஜிதம் செய்ய, சாட்சியாக விசாரிக்கப்படாததாலும், இவ்வழக்கில் மேற்கண்ட சந்தேகங்கள் எழுவதாலும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து இவ்வழக்கில் எதிரிகள் மீதான சட்டப்பிரிவு 430, 379 இதசவின் கீழான குற்றம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படுகிறது.

**22)** முடிவாக, இவ்வழக்கில் எதிரிகள் சட்டப்பிரிவு 430, 379 இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை சட்டப்பிரிவு 248 (1) குவிமுசவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**23)** எதிரிகள் இவ்வழக்கில் எழுதிக்கொடுத்துள்ள பிணைபத்திரம் வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

**24)** இவ்வழக்கு சொத்தான சி.பி.எண்.210/2020 ல் கண்ட 1) PY-01-AQ-1523 என்ற இருசக்கர வாகனத்தை அதன் உரிமையார் இந்நீதிமன்ற சி.எம்.பி.2120/2020 தேதி 28.10.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி இடைகாலமாக பெற்றுச்சென்றுள்ளார். மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு நிரந்தர உடைமையாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 06.04.2026-ந் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.04.06 16:58:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

கடலூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு. கலியன் (தலைமைக் காவலர்)

அசா.2 திரு. சம்பத்குமார் (தலைமைக் காவலர்)

அசா.3 திரு. பாலாஜி ( காவல் ஆய்வாளர் ஓய்வு)

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

அசாஆ.1 18.07.2020 கைப்பற்றுதல் மகசர்

அசாஆ.2 18.07.2020 கணினி முதல் தகவல் அறிக்கை

அசாஆ.3 18.07.2020 படிவம் 95

அசாஆ.4 23.07.2020 கடலூர் நீர் வள உதவி பொறியாளர் அளித்த சான்று

அசாஆ.5 24.07.2020 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**அரசு தரப்பு சான்றுபொருள் - இல்லை**

**எதிரிகள் தரப்பு சான்றாவணம், சான்றுபொருள் - இல்லை**

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.04.06 16:58:43 +0530

நீதித்துறை நடுவர் எண்.1

கடலூர்.

**குறிப்பு**

1. விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை

**நகல்**

1. மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர், கடலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.